2026 சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைப்பதற்காக கழகத்தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொகுதிவாரியாக பார்வையாளர்களை நியமித்துள்ளார்கள். சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிலையில், கழக இளைஞர் அணியினர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு பணிகளை தொடங்கியுள்ள, இளைஞரணியின் மாநில துணைச் செயலாளர்கள் மாவட்ட அமைப்பாளர்கள் நேற்று முன்தினம் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

அருண்நேரு எம்.பி. முன்னிலை! மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்!

பெரம்பலூர் மாவட்டத்தில் 522 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

பெரம்பலூர், அக். 30 - பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாமை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், தனலட்சுமி சீனிவாசன் பல்கலை கழகத்தில் தொடங்கி வைத்து, முகாமினை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு முன்னிலை வகித்தார். தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவராவ் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் ஆகியோர் ஆகியோர் தலைமை வகித்தனர். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் திட்ட விளக்கவுரை யாற்றினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆதர்ஸ் பசேரா இ.கா.ப.,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில், பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள MRF உள்ளிட்ட நிறுவனங்கள் மற்றும் சென்னை காஞ்சிபுரம், ஒசூர், கோயமுத்தூர், திருப்பூர், மதுரை மற்றும் திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 142 முன்னணி தனியார் நிறுவனங்களும் 03 திறன் பயிற்சி நிறுவனங்களும் கலந்து கொண்டன.

இன்றைய முகாமில் 2,021 ஆண்களும், 2,211 பெண்களும் என மொத்தம் 4,232 நபர்கள் கலந்து கொண்டார்கள். இதில் 362 ஆண்களுக்கும், 159 பெண்களுக்கும், 01 மாற்றுத்திறனாளிக்கும் என மொத்தம் 522 நபர்களுக்கு உடனடி பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார். இந்த முகாமில் இரண்டாம் கட்ட தேர்வுக்கு49 ஆண்களும், 58 பெண்களும் என மொத்தம் 107 நபர்கள் தேர்வாகியுள்ளனர். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் நடத்தப்படும் பல்வேறு இலவச திறன் பயிற்சிகளுக்கு 15 நபர்கள் விண்ணப்பம் வாயிலான விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இம்முகாமை தொடங்கி வைத்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் படித்த இளைஞர்கள் தங்களுடைய சான்றிதழ்களுடன் வேலை தேடி ஆங்காங்கே அலைந்து கொண்டிருந்த காலம் மாறி தற்போது அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி அதன் மூலம் இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் பல்வேறு தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களின் மூலம் இது வரை சுமார் 2,17,000 நபர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ,மாணவிகள் உயர் கல்வியினை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கான திறன் மேம்பாட்டை உயர்த்தும் வகையில் "நான் முதல்வன்" என்ற திட்டத்தினை அறிவித்து அதற்காக ரூ.200 கோடிக்கும்மேல் நிதி ஒதுக்கீடு செய்து இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். நான் முதல்வன் என்ற போர்ட்டலை உருவாக்கி, நாம் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், என்ன படிப்பு படித்தால் என்ன வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு என்ற விவரங்களை உள்ளடக்கியதாக அந்த போர்ட்டல் விளங்குகின்றது. அதுமட்டுமில்லாமல் கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு எதிர் காலத்தில் எந்த துறையை தேர்ந்தெடுத்தால் அதிக பணி வாய்ப்பு கிடைக்கும் என்பது போன்ற பல்வேறு சிறப்பு வசதிகளுடனும் இந்த போர்ட்டல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை மாணவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்கள், இளைஞர்களுக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்றுள்ளதால் வேலை நாடுநர்கள் தங்களுக்கு பிடித்த நிறுவனங்களில், விரும்பிய சம்பளத்துடன் பணி புரிவதற்கான நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இந்த வேலைவாய்ப்பு முகாமினை சிறப்பாக நடத்துவதற்கு, பல்வேறு நிறுவனங்களுடன் பேசி அவர்களை இங்கே வரவழைத்து தனியார் வேலைவாய்ப்பு முகாம் சிறப்பாக நடத்த முழுப்பங்காற்றியுள்ளவர் மதிப்பிற்குரிய பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள். இன்றைய காலகட்டத்தில் தனியார் துறையில் சுமார் 20,000 மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உள்ளன. இளைஞர்கள் அதனை சரியாக பயன்படுத்திக் கொண்டு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

அறிவியல் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் பல்வேறு ஆய்வுகளை நடத்தி மின்விளக்கு, தொலைபேசி, கிராமபோன் போன்ற பல அறிவியல் கண்டுபிடிப்புகளை நமக்கு அளித்தவர். அவற்றை கண்டுபிடிப்பதற்கு முன் நூற்றுக்கணக்கான முறை அவர் தோற்றுள்ளார். ஆனால் அவருடைய தொடர் முயற்சியால் தான் நமக்கு பயனுள்ள பல அறிவியல் சாதனங்கள், கருவிகள் கிடைத்தது. அதே போல செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகனான ஆபிரகாம் லிங்கன் அவர்கள் எவ்வித வசதியுமின்றி தானாக படித்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார். நீங்கள் தாமஸ் ஆல்வா எடிசனாகவோ இல்லை ஆபிரகாம் லிங்கன் போன்றோ உருவாகவில்லை என்றாலும் நமது குடும்பத்தை சிறப்பாக வாழ வைக்கும் அளவுக்கு நமக்கான வேலையினை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு இளைஞரும் தங்களுடைய வாழ்க்கையில் எல்லாமே சிறந்ததாக நடக்கும் என விடாமுயற்சியுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டால் வாழ்வில் உங்கள் இலக்கை நீங்கள் நிச்சயம் அடைவீர்கள். வெற்றியைத் தேடிச் செல்வோம் கடுமையாக உழைப்போம் வெற்றியைப் பெறுவோம் என்ற லட்சியத்தோடு இருங்கள், உங்கள் எதிர்கால வாழ்விற்கான வேலை வாய்ப்பினை உருவாக்கித் தர அரசு எப்போதும் தயாராக உள்ளது.

இவ்வாறு அமைச்சர் சி.வெ.கணேசன் தெரிவித்தார்.

பின்னர் வேலை வாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார். மேலும். முன்னோடி வங்கி மூலம் இரண்டு நபர்களுக்கு தலா ரூ.1.20லட்சம் மதிப்பிலான கல்விக் கடனுதவிக்கான காசோலையினையும், ஒரு நபருக்கு சுயதொழில் தொடங்க ரூ.17 லட்சம் மதிப்பிலான கடனுதவிக்கான காசோலையினையும் அமைச்சர் வழங்கினார்.

இந்த தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகை திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற பதிவு செய்யப்பட்டது. மாவட்ட தொழில் மையம், தாட்கோ போன்ற நிறுவனங்களின் மூலம் சுய தொழில் தொடங்கும் வகையில் விருப்பமுள்ளவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள் சுயதொழில் உருவாக்கும் திட்டத்திற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மேலும் தொழில் பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம் நடைபெற்றது.

மேலும் இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தில் வழங்கப்படும் இலவச பயிற்சி வாய்ப்புகளுக்கு சேர்க்கை முகாமும், தமிழ்நாடு அரசின் அயல்நாட்டு நிறுவனத்தின் (OMCL) பதிவு வழிகாட்டுதல்கள், TNPSC, TNUSRBPolice, TRB,TET போன்ற அரசு பணி போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கையும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர்கள் குன்னம் சி. ராஜேந்திரன், (பெரம்பலூர்) தர்மன் ராஜேந்திரன் (திருச்சி), அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், நகர்மன்றத் தலைவர் திருமதி அம்பிகா இராஜேந்திரன், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மண்டல இணை இயக்குநர் இர.தேவேந்திரன், இணை இயக்குநர்கள் திருமதி.வே.மீனாட்சி, திருமதி.அ.அனிதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜ்குமார், பா.துரைசாமி, ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர்கள் திருமதி மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை உதவி இயக்குநர் செ.ரமேஷ் குமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொ) ஆ.பொ. ஆறுமுக வெங்கடேஷ், பெரம்பலூர் மாவட்டம் மற்றும் பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வெ. சுந்தரராஜன்
அக்டோபர் 30 (2021)

இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சென்னை இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பிரதிநிதி, பொருளாளர், அவைத்தலைவர் எனவும், தொடர்ந்து பகுதிச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

வடசென்னை கூட்டுறவு சங்கத் துணைத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப்போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

கழகத் தலைவர் அவர்கள், "களத்தில் பம்பரமாய்ச் சுழன்று பணியாற்றும் நல்லதொரு தளகர்த்தரை கழகம் இழந்திருக்கிறது" என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கும் நிகழ்வு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் நடைபெற்றது. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை சேர்த்து துணை முதலமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். உடன் அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

ரூ.10.18 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்!

திருப்பூர், அக். 30 - வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டம்ன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.10.18 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்து, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட அகலரப்பாளையம் புதூரில் 26.10.2024 சனிக்கிழமை அன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை திறந்து வைத்து,

சொரியங்கிணத்துப்பாளையம் உரக்கிடங்கு வளாகத்தில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.9.87 கோடி மதிப்பீட்டில் 4 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளை துவக்கி வைத்து, கல்லாங்காட்டு வலசு பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தினை திறந்து வைத்து என மொத்தம் ரூ.10.18 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்து, வெள்ளகோவில் ஒன்றியத்திற்குட்பட்ட வீரசோழபுரம் மற்றும் வேலம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த 20 பயனாளிகளுக்கு ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் ஊரக குடியிருப்புகள் பழுது நீக்கம் செய்தல் திட்டத்தின் கீழ் பணி ஆணைகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், பொதுக் குழு முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோனசெல்வம், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், நகர்மன்ற தலைவர் கனியரசி முத்துக்குமார், துணைத் தலைவர் விஜயலட்சுமி, நகராட்சி ஆணையாளர் வெங்கடேசன், செயற்பொறியாளர் திலீபன் மனோகரன், காங்கயம் வட்டாட்சியர் மோகனன் உள்பட மாவட்ட, நகர, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி மெக்சிகோவின் குவாதலகாரா மாநகரில் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் உணவுகளும் வழங்கப்பட்டன, இந்தவிழாவானது வெளிநாடுவாழ் தமிழ்இந்தியர்கள் அமைப்பின் மெக்சிகோ ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் திருநாவுக்கரசு, துணை ஒருங்கிணைப்பாளர்கள் கணேசன் வடிவேல், நாகார்ஜீன் லியன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சென்னை தீனன்
அக்டோபர் 30 (1977)

சென்னை, சைதாப்பேட்டை, முனியப்பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த இவர், இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகப் பணியாற்றியவர்.

1977ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற் கிணங்க, சென்னையில் நடைபெற்ற பேராட்டத்தில் கறுப்புக் கொடி ஏந்தி களம் கண்டபோது, அன்றைய ஆட்சியாளரின் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.